[30th March 1963

திரு. இராம. அரங்கண்ணல் : தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட அரசினர் எடுக்கும் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வருகிறோம். அர்ச்சகர்களுக்கு பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதே, அங்கே எவ்வளவு தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்களும் அர்ச்சகர்களாக வேண்டுமென்றால், அதை நான் விரும்ப மாட்டேன். குறிப்பிட்ட தகுதி உள்ளவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த வேலையை ஹரிஜனங்கள் செய்ய வேண்டும் என்பதில்லை ; அது கஷ்டமான வேலை ; வருமானம் இல்லை. அவர்கள் படித்து நல்ல உத்தியோகங்களைப் பார்க்க வேண்டும் அதை விட்டு, கோவில் கர்ப்பகிருகத்தில், புகையில் வேலை செய்ய பயிற்சி கொடுக்கிறேன் என்று நான் சொல்லத் தயாராக இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தமிழ் நாட்டில் தேர்தலில் தோற்றவர்கள், பின்னால் வடநாட்டுப் புண்ணிய க்ஷேத்திரங்களில் பாவ மன்னிப்புக் கோருகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது.

திரு. சி. பொன்னுசாமி : கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது தான் எதிர்க் கட்சி அங்கத்தினர் தேர்தல் பிரசாரம் பற்றிப் பேசினார். ஆண்டவன் இல்லை என்று ஒரு கூட்டமானது பிரசாரம் செய்துவருகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆண்டவன் இருக்கிறாரா, இல்லையா என்று கனம் அங்கத்தினர்கள் கவலைப்பட வேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

திருமதி. டி. என். அனந்தநாயகி : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் கோவில்களுக்குப் போக வேண்டும் என்று அற நிலையப் பாதுகாப்பு இலாகாவினர் செய்வது மட்டுமின்றி, நல்ல சமுதாய பிரசாரகர்களை அழைத்து, அவர்களைக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களிடையே கோவில் செல்லும் பழக்கத்தை அதிகரிக்க சமூகப் பிரசாரம் நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்காக "கான்வஸ்" செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

சுரங்க மின்சாரத் திட்டம்

* 456 கேள்வி.—**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மேட்டூர் சுரங்க மின்சார திட்டத்தைப் போல் வேறெங்காவது சுரங்க மின்சார திட்டம் அமைக்க வசதி உள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : None, among the schemes so far investigated.

ஆசிரியர்களுக்குச் சீருடை

* 457 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்கள், ஒரே நிறமுள்ள உடைகள் அணியவேண்டுமென்று, உத்திரவிட அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால் எப்பொழுதிலிருந்து அமுலுக்கு வரும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.